# IN THE COURT OF PRINCIPAL DISTRICT JUDGE, DHARMAPURI

## O.S. No. 169 of 2023

**வாதி தரப்பு சாட்சி 1 (P.W.1): திருமதி.லதா** **Date: 09.10.2025**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி: (பிரதிவாதி தரப்பில்)**

தாவா சொத்தில் கட்டியுள்ள வீட்டின் கதவு எண்.4/340 C. தாவா சொத்தில் நான் வீடு கட்டிய பின்பு தான் கதவு எண் வாங்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் வீடு கட்டும்போது கட்டுமானத்திற்கான மின் இணைப்பு யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் என் கணவருக்குத்தான் தெரியும். தாவா சொத்து காலி இடமாக தான் இருந்தது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த இடத்தில் வீடு கட்டுவதற்கு எங்கள் பெயரில்தான் மின் இணைப்பு வாங்கி இருப்பேன் என்றால் சரிதான். நான் முன்னாள் ஊராட்சி மன்ற துணை தலைவராக இருந்துள்ளேன். தாவா சொத்தில் உள்ள வீட்டு வரி ரசீதில் ஊராட்சி மன்ற தலைவர்தான் கையொப்பம் இடுவார் என்றால் சரிதான். என் வீட்டின் மின் இணைப்பு எனக்கு ஞாபகமில்லை. எந்த மாதம் நான் வீடு கட்ட கட்டுமான மின் இணைப்பு வாங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது, என் கணவருக்குத்தான் தெரியும். என்னிடம் காட்டப்படும் வீட்டு வரி ரசீது 2021–22 கதவு எண்.4/340 C – க்குண்டானது என்றால் சரிதான். ஊராட்சி மன்ற தலைவர் கையொப்பம் இட்டுள்ளார். அது **பி.சா.ஆ.3**. 2022ம் வருடம் தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி வீடு கட்டுவதற்காக கட்டுமான மின் இணைப்பு ரசீது 2ம் பிரதிவாதியின் மாமனார்

பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணம் **பி.சா.ஆ.4**. 2016லிருந்தே தாவா சொத்தில் வீடு இருந்துள்ளது என்றும் அதற்கு மின் இணைப்பு உள்ளது என்றும் 2ம் பிரதிவாதியின் மாமனார் பெயரில் கட்டியதற்கான ரசீது **பி.சா.ஆ.5** என்றால் சரிதான். தாவா சொத்தில் 2016ம் வருடம் முதலே வீடு இருந்துள்ளது என்றும் அதற்கான ஆவணங்கள் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக தாவா சொத்தில் காலியாக இருந்தது என்று வீடு கட்டியதாக மின் இணைப்பு வாங்கயிதாக பொய்யாக விவரங்கள் கூறுகிறேன் என்றால் சரியல்ல. 2022ம் வருடம் 2ம் பிரதிவாதியின் மாமனார் தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பை கட்டுமானம் கட்டுவதற்காக புதிதாக மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றால் தவறு. தாவா சொத்தில் உள்ள வீடு செங்கல் வைத்துதான் கட்டப்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்பட ஆவணத்தில் உள்ளதுதான் அந்த வீடு என்றால் சரிதான். அந்த புகைப்படம் **பி.சா.ஆ.6.** அந்த புகைப்பட ஆவணத்தில் பழைய வீட்டை மாற்றி கட்டியதற்கான அமைப்புதான் உள்ளது என்று சொன்னால் தவறு. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்பட ஆவணத்தில் உள்ள வீட்டு வாசப்படி நாங்கள் வைத்தது அல்ல. அந்த புகைப்படம் **பி.சா.ஆ.7.** தாவா சொத்தில் ஏற்கனவே 2ம் பிரதிவாதிதான் வீடு கட்டி வாழ்ந்து வந்தார் என்றும் அதை நாங்கள் கட்டியது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீடு நான் கட்டவில்லை என்றும் பிரதிவாதியிடம் இருந்து

பணம் பறிக்கும் எண்ணத்துடன் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியும் என் கணவரும் நண்பராக இருந்தார்கள் என்றால் சரிதான். இருவரும் ஒரே ஊர்காரர்கள், ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். தாவா சொத்து விவரத்தில் 2 தாக்காக காட்டப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி 2ம் தாக்கிற்கு கையொப்பம் போட அழைத்து சென்று மோசடியாக அவரிடம் இருந்து கிரயம் பெறப்பட்டது என்று சொல்வது சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

Taken down by me in the open court. Read over to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 09.10.2025.

THIRUMAGAL C Digitally signed by THIRUMAGAL C Date: 2025.10.09 16:59:55 +0530
Principal District Judge, Dharmapuri.